1975 அக்டோபர் 29]

எடுப்பது பற்றியும் ப்ரோபோசல் அனுப்பியிருக்கிறார்கள். அது சர்க்காரின் பரிசீலனையில் இருக்கும் காரணத்தால் பரிசீலனை முடிந்த பிறகு மற்றக் காரியங்கள் நடைபெறும்.

திரு. எம். ஏ. லத்தீப் : குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக இதுபற்றிய பங்கீடு செய்யப்படும்போது அதற்கு ஒரு ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். அந்த ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள்? அதிலே எல்லாச் சாராரும் இடம் பெற்றிருக்கிறார்களா? குறிப்பாக முஸ்லிம் இடம் பெற்றிருக்கிறாரா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இது குடிசை மாற்று வாரியத்தை சார்ந்து வீடுகளைக் குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக்கிக் கொடுப்பது பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் கூற முடியும்.

திரு. இராம. அரங்கண்ணல் : குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் ஒதுக்க தனிப்பட்ட முறையில் கட்சி சார்புடைய ஆலோசனைக் குழு எதுவும் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதிகாரிகள் புகைப்படம் எடுத்து நியாயமான முறையில்தான் வீடுகளை ஒதுக்குகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அரசுக்குத் தெரியும்.

வீடுகள் கட்டுமானச் செலவு

* 118 **வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வீடு கட்டும் கட்டுமானச் செலவைக் குறைப்பது குறித்து ஆராய்ச்சி ஏதேனும் செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை. ஆராய்ச்சி ஏதும் செய்யப்படாவிடினும், கட்டுமான பணிகளுக்கு ஆகும் செலவுகளை சிக்கனப்படுத்த பல நடவடிக்கைகளை வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ளது.

[1975 அக்டோபர் 29

திரு. என். கிட்டப்பா: வீடு கட்டும் செலவைக் குறைக்க தக்கைக் கல் முறை ஒன்று உருவாக்கப்படியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஜப்பான் முறையில் வீடுகளைக் கட்டினால் சிக்கனமாகக் கட்ட முடியும் என்று விவரம் தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். அத்தகைய முறைகளை அரசு ஆராய்ந்து சிக்கனமான முறையில் வீடுகளைக் கட்டுவதற்கான வழிவகைகளை வகுத்துக் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தக்கைக் கல் முறையில் இப்போது கூரைகளில் மட்டும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. மற்றவைபற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஜப்பானிய முறைபற்றி ஆராயவில்லை.

ஓசூர் கால்நடைப் பண்ணை

*119 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1973-74-ல் ஓசூர் கால்நடை வளர்ப்புப் பண்ணையில் சிந்திப் பசுக்கள் வளர்ப்பை தீவிரப்படுத்த மத்திய அரசு ஒதுக்கியுள்ள தொகை என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மத்திய அரசு ஒதுக்கியுள்ள தொகை ரூ. 4,56,000.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: ஓசூர் கால்நடைப் பண்ணையை மேலும் அபிவிருத்தி செய்ய மாநில அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா? அதன் விவரத்தை அறியலாமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மாநில அரசுதான் செய்து கொண்டிருக்கிறது. சமீபத்தில் இதுபோன்று சென்ட். பர்சென்ட் கிராண்ட் எல்லா மாநிலங்களுக்கும் கொடுப்பதுபோல் நமது மாநிலத்திற்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister what kind of development they are making there with regard to Sindhi cows? May I also know from the Hon. Minister whether any new schemes have been introduced?